முருகப்பெருமான் துணை

துறையூர் ஓங்காரக்குடிலாசான் ஆறுமுக அரங்கமகா தேசிக சுவாமிகளுக்கு

**மகான் சுப்ரமணியர் அருளிய ஞான அறிவுரை ஆசி நூல்**

பாகம் : 1326

சுவடி வாசித்தளித்தவர் T. ராஜேந்திரன், M.A., B.Ed.,

ஓம் சரவண ஜோதியே நமோ நம

17.05.2023, புதன்கிழமை

1. ஞான வள்ளலே அரங்கா வாழ்க
   ஞானிகளோடு சூட்சுமமாய் அற்புதம் நிகழ்த்துகின்ற
   தானதர்மபலம் கொண்ட ஞானியே வாழ்கவாழ்க
   தர்மனே ஆறுமுக அரங்கனே உந்தனுக்கு
2. உந்தனுக்கு சுப்ரமணியர் யானும்
   உரைத்திடுவேன் ஞான அறிவுரை ஆசி
   (சோபகிருது வருடம் வைகாசி மாதம் 03 ம் நாள், 17.05.2023, புதன்கிழமை)
   விந்தைமிகு ஞானிகள் படையை விரைந்து உலகமெல்லாம் உருவாக்கி
   சிந்தை தெளிவித்து உலகோர் தனக்கு சித்தி அருளி சூட்சுமமாய்
   உலகமாற்றம் நிகழ்த்துகின்ற
3. நிகழ்த்துகின்ற அரங்கனே ஞானதேசிகனே
   ஞானபண்டிதன் என் சூட்சும அவதாரனே
   ஜெகமெங்கும் உன் நாமஜெபம் முழங்க
   சித்திகள் யாவர்க்கும் என்னருளால் உறுதியாகி
4. ஆகியே உலக மாற்றங்காணும் அரங்கன் நீ படைக்கும் ஞானசபை
   அகிலத்தை ஆளும் ஞான ஆட்சியாக
   அற்புதத்தை வரங்களாக ஆறுமுகன்
   அரங்கனுக்கு இன்று தருகின்றேன்
5. தருகவே இனி வரும்காலமெல்லாம்
   தக்கபடி ஆளுமை மாந்தர்களும் கூட
   வருவரப்பா ஓங்காரக்குடில் நோக்கி
   வலம்வந்து உன்னை வணங்கவே
6. வணங்கவே இந்த மாற்றம் அகிலமெங்கும்
   வரமாக என்னால் அருளப்பட்டு
   தரமான தர்ம சிந்தைகொண்ட
   தரணி எங்கும் தலைமைகள் சடுதி உருவாகி

7. ஆகியே உலகமாற்றம் நிகழும்
அரங்கன் ஞானத்துக்கே இந்த சக்தி உண்டு
மகிழவே உலகோர் அரங்கனை நோக்கி
மண்ணுலகில் சரணாகதி கொண்டுவந்தால் போதும்

8. போதுமப்பா மாற்றம் சடுதி உண்டு
புண்ணியத்தால் இது நடந்தேறும்
ஆதலால் உலகோர் பிரணவக்குடில் நோக்கி
அனுகவே அற்புதம் நிகழும்நிகழும்

ஞான அறிவுரை ஆசி முற்றே

–சுபம்–